‘நீட்’ விலக்கு – மதுரை ‘எய்ம்ஸ்’ – மீனவர் பிரச்சினை உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து

# நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பிரச்சினை எழுப்புவோம்!

## அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்குப் பிறகு – டி.ஆர்.பாலு – திருச்சி சிவா பேட்டி!





புதுடெல்லி, நவ. 25 –

**நீட் விலக்கு, மதுரை எய்ம்ஸ், மீனவர் பிரச்சனை உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து நாடாளுமன்ற கூட்டத் தொடரில் பிரச்சனை எழுப்ப உள்ளதாக மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.**

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் நாளை தொடங்கி டிசம்பர் 20ம் தேதி வரை நடைபெறவுள்ளது. வக்பு வாரிய சட்ட திருத்தம், ஒரே நாடு ஒரே தேர்தல் உள்ளிட்ட மசோதாக்களை இக்கூட்டத் தொடரில் தாக்கல் செய்ய ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது. இக்கூட்டத் தொடரில் பல்வேறு பிரச்சனைகளை எழுப்ப எதிர்க்கட்சிகளும் திட்டமிட்டுள்ளன. இதனால், கூட்டத்தொடரை சுமூகமாக நடத்த அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு ஒன்றிய அரசு அழைப்பு விடுத்தது. இதன்படி, நேற்று காலை 11 மணிக்கு அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அதானி குழுமத்தின் முறைகேடுகள், மணிப்பூர் வன்முறை உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து நாடாளு மன்றத்தில் விவாதிக்க வேண்டும் என காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.

இதனைத் தொடர்ந்து மக்களவை தி.மு.க. குழு தலைவர். டி.ஆர்.பாலு, மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா ஆகியோர் செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது, நீட் விலக்கு, மதுரை எய்ம்ஸ், மீனவர் பிரச்சனை, பள்ளிக் கல்விகான ஒன்றிய அரசின் நிதி விவகாரங்கள் குறித்து குறித்து நாடாளுமன்ற கூட்டத் தொடரில் பிரச்சனை எழுப்ப உள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

### டி.ஆர்.பாலு பேட்டி!

டி.ஆர். பாலு எம்.பி.செய்தியாளர்களிடம் கூறியதாவது: –

நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டம் இராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் தலைமையில் இன்றைக்கு நடைபெற்றது. நாளைக்கு தொடங்க இருக்கிற நாடாளுமன்றத்தில் என்னென்ன பிரச்சினைகள் குறித்து பேச இருக்கிறீர்கள் என்று ராஜ்நாத் சிங் அவர்கள் கேட்டபோது, ஒவ்வொரு கட்சியின் பிரதிநிதிகளும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அதில், நானும், தம்பி சிவா அவர்களும் கலந்து கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இரு அவைகளிலும் பேச இருக்கிற கருத்துகள் குறித்து என்னென்ன பிரச்சினை கள் பேச வேண்டும் என்பது குறித்து மிகவும் சுருக்கமாக பேச வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க நாங்கள் பத்து, பதினொரு பிரச்சினைகளை மட்டும் எடுத்து வைத்திருக்கிறோம்.

சாதிவாரி கணக்கெடுப்பு, இந்தியாவில் நீண்ட காலமாகவே கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. அது உடனடியாக எடுக்கப்பட வேண்டும். அவ்வாறு எடுத்தால்தான், இட ஒதுக்கீடும் போன்ற பிரச்சினைகள், அதன் அடிப்படையில் மக்களுக்கு சென்று சேர வேண்டிய பயன்கள் சென்று சேர முடியும் என்பது போன்ற பல்வேறு திட்டங்களுக்காக இந்த சாதிவாரி கணக்கெடுப்பு என்பது தேவை. அதை உடனடியாக செய்ய வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம்.

நீட், நீண்ட நாட்களாக பெண்டிங்ஆக இருக்கிறது. இந்த மாநிலத்திற்கு நீட் தேவையில்லை என்று முதல்வரோ, அங்கு இருக்கும் அரசியல் இயக்கங்களோ சொன்னால், அதை விட்டுவிட்டு மற்ற பிரச்சினைகளை அணுக வேண்டும். அந்த மாநிலத்திற்கு எது தேவை என்பதை தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும்; முதலமைச்சர் முடிவு செய்ய வேண்டும். நம்முடைய மாநிலத்தைப் பொருத்தவரை நீட் தேவையில்லை என்று பலமுறை சொல்லியும் கூட ஒன்றிய அரசு அதைப் பற்றி கொஞ்சம்கூட கவலைப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. ஒன்றிய அரசும் மாநில அரசும் ஒன்றாக இணைந்து பணியாற்ற வேண்டும் என்ற நிலை இப்படிப்பட்ட பிரச்சினைகள் காரணமாக பாதிக்கப்படுகிறது என்பது அவர்களுக்கு தெரியவில்லை.

மீனவர் பிரச்சினை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. நாள்தோறும் நாகப்பட்டினம், இராமேஸ்வரம் போன்ற பகுதிகளிலிருந்து மீன் பிடிக்கச் செல்கிற தமிழ் மீனவர்களை அச்சுறுத்தப்படுகிறார்கள். இலங்கையின் கடற்படையினால் தாக்கப்படுகிறார்கள் என்று பலமுறை பாராளுமன்றத்தில் பேசி இருக்கிறோம். அதைப்போல தலைவர் தளபதி அவர்களும் அடிக்கடி வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவர்களுக்கு கடிதம் எழுதுகிறார்; பிரதமருக்கு கடிதம் எழுதுகிறார். இப்படிப்பட்ட பிரச்சினைகளை எடுத்துச் சொல்லியும் முறையாக மீனவர் பிரச்சினை நம்முடைய ஒன்றிய அரசு அணுகவில்லை என்பது குற்றச்சாட்டாக இருக்கிறது. இதுபற்றி பாராளுமன்றத்தின் இருவைகளிலும் பேச இருக்கிறோம்.

மதுரை எய்ம்ஸ், உங்களுக்கு தெரியும். 2019லிருந்து கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. அதனுடன் தொடங்கப்பட்ட மற்ற எய்ம்ஸ் எல்லாம் இன்றைக்கு நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால், மதுரை எய்ம்ஸ்க்கு இதுவரை ஒரு செங்கல்கூட எடுத்து வைக்கவில்லை. அந்தத் திட்டம் வளரவே இல்லை என்பது குறையாகவே இருந்து கொண்டிருக்கிறது. இது பிரச்சினையை குறித்து பாராளுமன்றத்தில் எழுப்ப இருக்கிறோம்.

புதிய கல்வித் திட்டத்தின் அடிப்படையில் சமக்ர சிக்ஷா திட்டத்திற்கு 2,517 கோடி ரூபாய் நம்முடைய தமிழ்நாட்டிற்கு வர வேண்டும். அந்த நிதி இது வரை வரவில்லை. காரணம், புதிய தேசிய கல்வித் திட்டத்தை நீங்கள் நடைமுறைப்படுத்தவில்லை. அதனால் தர முடியாது என்று சொல்கிறார்கள். இது மாநில சுயாட்சிக்கு, ஒன்றிய மாநில உறவுகளுக்கு மிகவும் கேடு விளைவிக்கக் கூடியது என்பதை எச்சரிக்கையாக சொல்லி இருக்கிறோம். புதிய தேசியக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். அதை நடைமுறைப்படுத்த வாய்ப்பு இல்லை என்று தமிழ்நாடு அரசு சொல்லி இருக்கிறது.

30.6.2022 வரை ஜி.எஸ்.டி.காம்பன்சேசன் கொடுத்து கொண்டு இருந்தார்கள். அதற்குப் பிறகு, இதுவரை கிட்டத்தட்ட 20,000 கோடி ரூபாய் கொடுத்திருக்க வேண்டும். 30.6.2022க்குப் பிறகு அந்தத் திட்டம் அமலில் இல்லை. ஆனால் காம்பன்சேசன் என்பது கொடுத்தாக வேண்டும். இந்த ஜி.எஸ்.டி.யை அறிமுகப் படுத்தியதால் நமக்கு நஷ்டம் வருகிறது. இதை ஒன்றிய அரசு உடனடியாக கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கூறப்படும்.

அதேபோல, இந்திய அரசாங்கம் 202223ஆம் ஆண்டில் மட்டும் ஐந்து லட்சம் கோடி ரூபாயை சர் சார்ஜ் மற்றும் செஸ் மூலம் வசூல் செய்திருக்கிறார்கள். இந்த ஐந்து லட்சம் கோடி ரூபாயில் நமக்கு வர வேண்டிய பங்கு என்று பார்த்தால், 20,800 கோடி ரூபாய். இது எப்போது வரும்? இது அம்பிட்இல் கிடையாது. இது டெபிசிவ் பூல்இல் கிடையாது. இந்த செஸ் மற்றும் சர் சார்ஸ் என்பது ஒன்றிய அரசிற்கு வரும் நிதியிலிருந்து பிரித்துக் கொடுக்கும் திட்டம் கிடையாது. சர் சார்ஜ் வசூல் செய்தாலோ, செஸ்ஆக கலெக்ட் செய்தாலோ அதில் வரும் வரி வசூலை மாநில அரசிற்கு தருவதில்லை. இது மிக மிக கொடுமையான ஒன்று. இது பற்றி தீவிரமாக பாராளுமன்றத்தில் பேச வேண்டும். இந்த நிதி பகிர்வுத் திட்டத்தை மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டும். திரும்ப ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நாம் சொல்லியிருக்கிறோம்.

அதிகமான இரயில்வே திட்டங்கள் அறிவித்து பல ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் இப்போது நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும். இப்போது நடைமுறையில் இருக்கும் திட்டங்களுக்குகூட நிதியை சரியாக தருவதில்லை.

வக்ஃபு வாரிய திருத்த மசோதா திரும்பப் பெற வேண்டும் என்று நாங்கள் பாராளுமன்றத்தில் பேச இருக்கிறோம்.

வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்கள் மிகவும் சிரமப்பட்டு, வாழ்க்கையை நடத்துவதற்கே மிகவும் சிரமப்பபட்டு கொண்டிருக்கிறார்கள். வேலைவாய்ப்பு இல்லாத நிலையை போக்குவதற்கு, புதிய வேலைவாய்ப்புகள் கொடுக்கின்ற பெரிய தொழில் நிறுவனங்களை ஏற்படுத்தி அல்லது அதுவரையில் படித்த இளைஞர்களுக்கு வேறு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்பது குறித்து பேச இருக்கிறோம்.

ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற நிலைப்பாடு இருக்கக் கூடாது. அது பற்றி பேசுவது தவறு. அவ்வாறு பேசினால் ஜனநாயகத்தின் ஒட்டுமொத்த கோட்பாடுகளும் கேள்விக்குறியாகிவிடும். அது தேவையில்லை. அதை நீங்கள் திரும்பப் பெற வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம்.

மணிப்பூரில் ஏறத்தாழ ஒரு வருடமாக பிரச்சினை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. மணிப்பூருக்கு ஒரு முறைகூட பிரதமர் சென்று பார்க்கவில்லை. அவ்வாறு சென்று பார்த்து அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு பிரதமர் உடனடியாக ஆவணம் செய்ய வேண்டும் என்பது குறித்தும் பேச இருக்கிறோம்.

இவ்வாறு டி.ஆர்.பாலு எம்.பி.அவர்கள் குறிப்பிட்டார்.

### திருச்சி சிவா பேட்டி!

மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா எம்.பி. அளித்த பேட்டி வருமாறு: –

**கேள்வி:** அதானி ஊழல் பிரச்சினை பெரும் பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது. நாடாளுமன்றத்தில் நாளைக்கே அனைத்துக் கட்சிகளும் அதைப் பேசுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. தி.மு.க. சார்பில் அதை எப்படி கையாளப்போகிறீர்கள்?

**பதில்:** எதிர்க்கட்சிகளோடு சேர்ந்து அந்தப் பிரச்சனையில் நாங்கள் ஒற்றுமையாக ஒரே கருத்தாக நிச்சயமாக அதை எழுப்புவோம். இந்திய நாடு என்பது மக்களுக்கான ஜனநாயக நாடு என்பதாக இருந்த நிலை மாறி, முதலாளிகள் நாடாக மாறிவிட்டது.

அதானி, அம்பானி என்ற இருவரின் ஒட்டுமொத்தமான ஆதிக்கத்தின் அடிப்படையில் தான் இந்தியப் பொருளாதாரம் இருக்கிறது என்கிறபோது, அவர்கள் தொடர்புடைய பலமுறைகேடுகள் ஏற்கனவே வந்திருக்கின்றன.

ஹிண்டன்பர்க் வந்தது. அதற்கு நாடாளுமன்றக் கூட்டுக்குழு அமைத்திட வேண்டும் என்று வலியுறுத்தினோம். ஆனால், அரசாங்கம் செவி சாய்க்கவில்லை. காரணம், அவர்களை ஆதரிப்பதைப் போல அவர்களின் செயல்பாடுகள்; அவர்களைப் பாதுகாப்பது போன்ற இந்த அரசாங்கத்தின் செயல்பாடுகள் இருக்கின்றன.

அதுபோல, இப்போது அமெரிக்காவின் எஃப்.பி.ஐ. அறிக்கை என்பதும் ஒரு பெரிய அதிர்வலையை ஏற்படுத்தி இருக்கிறது. எதுவாக இருந்தாலும் குரல் எழுப்புகிறபோது, அரசாங்கம் தன் தரப்பில் எந்தக் குறையும் குற்றமும் இல்லை என்றால், ஒரு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அதில் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்ல வேண்டும் என்று வலியுறுத்தி இந்த நாடு இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து அப்பாற்பட்டது என்பதை மக்களுக்கும் உலகத்திற்கும் தெரிவிக்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. அரசாங்கத்தை அந்தக் கடமையைச் செய்யச் சொல்லி நாங்கள் நிச்சயமாக வலியுறுத்துவோம்.

இவ்வாறு திருச்சி சிவா எம்.பி. குறிப்பிட்டார்.



விருகம்பாக்கம் தொகுதி கலைஞர்நகர் தெற்குபகுதியில், மாவட்ட செயலாளர் அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைபடி, வாக்காளர் சிறப்பு முகாமையொட்டி, 136,136அ, 137, 137அ, 137ஆ, 138, 138 அ வட்டங்களில் வட்ட செயலாளர்கள் பூக்கடை ஆர்_பழனிச்சாமி, இரா.செழியன், பிகேகுமார், வழக்கறிஞர் சதீஷ்கண்ணன், அ.கதிரேசன், சோ.செந்தில்குமார், மு.அன்பழகன் தலைமையில் முகாமில் பொதுமக்களுக்கு உதவிய அனைத்து பாகதலைவர்கள் பணிகளை பகுதி செயலாளர் கே.கண்ணன், ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., தொகுதி தலைமையிட பார்வையாளர் வே.உமாகாந்த் ஆகியோர் ஆய்வு செய்தனர். உடன் மாவட்ட துணை செயலாளர் வாசுகிபாண்டியன், பகுதி துணை செயலாளர் அஜந்தாரவி, எஸ். உமாபதி உள்ளிட்ட கழகத்தினர் உடன் உள்ளனர்.

---

### இளைஞர்களின் எழுச்சி நாயகன்

தமிழ்நாடு துணை முதலமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர்

## உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் வேண்டுகோள்!

இளைஞர்களின் எழுச்சி ஞாயிறு இளந்தலைவர் கழகத்தின் விடிவெள்ளி தமிழ்நாடு துணை முதலமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்களின் பிறந்தநாளான நவம்பர் 27 அன்று, தி.மு.க. தொழிலாளர் அணியின் சார்பில் மாநிலம் முழுவதும் மாநில நிர்வாகிகள் மற்றும் ஒவ்வொரு மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் “எளியோர் எழுச்சி நாளாக” மாநிலத்தில் அனைத்துப் பகுதிகளிலும் எழுச்சியுடன் கொண்டாடிட வேண்டுமெனவும்;

இப்பிறந்த நாள் விழாவினை, தொழிலாளர் அணி சார்பில் நலிந்த தொழிலாளர்களுக்கும் ஏழையெளியோர்க்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் வண்ணம் தத்தமது பகுதிகளில் உள்ள முதியோர் இல்லங்கள், அனாதை இல்லங்களில் ஏழையெளியவர்களுக்கு உணவு வழங்கியும் அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் வழங்கியும் “எளியோர் எழுச்சி நாளாக” சிறப்பாக கொண்டாடிட வேண்டுமென தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகளையும் அனைத்து மாவட்டத்திலுள்ள தொழிலாளர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்களையும் தொழிலாளத் தோழர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை18.
24- 11- 2024.

**பிடிசி ஜி.செல்வராஜ்,**
செயலாளர் - தி.மு.க. தொழிலாளர் அணி.

---

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்!

# நல உதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாட முடிவு!

சென்னை கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார். இதில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சென்னை, நவ.25-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாட சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்தில் முடிவு செய்யப்பட்டிருப்பதாக மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (24.11.24 - ஞாயிற்றுக்கிழமை) சென்னை, வில்லிவாக்கம் எம்.டி.எச். சாலையில் உள்ள டி.கே.ஏ. திருமண மகாலில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்து. இக்கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில், மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: ப.தாயகம்கவி, அ.வெற்றிஅழகன், ஜோசப்சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்: ப.ரங்கநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: பி.கே.மூர்த்தி, கே. சந்துரு, கே.எஸ்.எம். நாதன், எம்.விஜயகுமார், சி.மகேஷ்குமார், எஸ்.மணிமுடி, கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, வே.உமாகாந்த், பரிதிஇளம்சுருதி, ஆர். வரதன்,

மாவட்ட நிர்வாகிகள்: தேவஜவஹர், ஜி.எம்.தேவன், இசட் ஆசாத், பகுதிக் கழக செயலாளர்கள்: கூ.பி.ஜெயின், வே.வாசு, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.ராஜசேகர், டி.எஸ்.பி. இராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ். தேர்தல் பொறுப்பாளர்கள்: இரா.விடுதலை, ஓ.ஏ.நாகலிங்கம், பி.எம். யாமினி, இரா.நரேந்திரன், என்.கிருஷ்ணமூர்த்தி, பி.முனியாண்டி

பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், பி.உதயசங்கர் ஆர்.கலைச்செல்வி, இப்ராஹிம் கனி, நிர்மலா தேவி, சரிதா மகேஷ்குமார், ரமேஷ் (எ) நீலகண்டன், டாக்டர்.பூர்ணிமா, நந்தீஸ்வரன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: க.வினோத், ஜி.ஜே.பிரபு, ஆர்.தனசேகர், ஜெ. பாலமுருகன், வானவில் விஜய், ந.துலுக்காணம், ஜி. தாமோதரன், எம்.பிரோஸ்கான், பி.விஜய்குமார், துரைக்கண்ணன், மா.அசோக்குமார், கா.ராஜா முகம்மது, ஜி.பி.பிரதீப்குமார், இரா.வீரமணி, எல். சம்பத்குமார், எம்.விநாயகம், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், ஜி.வி.நாகவள்ளி பிரபாகரன், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் ஆர்.தினதயாளன் நன்றி கூறினார்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி, கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் “என் உயிரினும் மேலான” என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பேச்சு போட்டியில் பட்டைத்தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்களைக் கொண்டு சென்னைகிழக்கு மாவட்ட திமுக சார்பில் நடத்தப்பட்ட தொடர் 8 பேச்சரங்கத்தில் 5வது பேச்சரங்கமாக 08.11.24 வெள்ளிக்கிழமை அன்று கொளத்தூரில் நடைபெற்ற பேச்சரங்கத்திற்கு வருகை தந்து மக்களோடு மக்களாக மாணவர்களோடு மாணவராக அமர்ந்து இளம் பேச்சாளர்களின் உரைவீச்சை கேட்டு மகிழ்ந்து அவர்களை உற்சாகப் படுத்திய கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களை இக்கூட்டம் வணங்கி பாராட்டி தீர்மானம் நிறைவேற்றியது.

01.01.2025 தேதியை தகுதி நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தும் பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்ததை தொடர்ந்து தமிழ்நாட்டில் நடைபெற்ற நவம்பர் 16, 17 தேதிகள் மற்றும் 23, 24 ஆகிய நான்கு தேதிகளில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் திருத்தும் பணிகளில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையின்படி சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளில் அடங்கிய 13 பகுதிகளில் உள்ள 1379 பாகங்களில் சிறப்பு முகாம் அமைத்து வாக்காளர் சேர்த்தல் நீக்கல் பணிகளில் BLA 2 BLC க்களுடன் இணைந்து பணியாற்றிய மாவட்ட / பகுதி) வட்ட நிர்வாகிகளுக்கும் BLA2BLCக்களுக்கும் இக்கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற கழக உயர்நிலை செயல் திட்ட உறுப்பினர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சொன்னதையும் நிறைவேற்றி சொல்லாததையும் நிறைவேற்றி வளமான தமிழ்நாட்டை உருவாக்கிய கழக அரசின் சாதனைகளால் திட்டங்களால் பயனடைந்த மக்களிடமும் மனநிறைவு பெற்றவர்களிடமும் மீண்டும் மீண்டும் நினைவூட்டும் வகையில் சென்னை கிழக்கு மாவட்டத்தை சார்ந்த ஒவ்வொரு உடன்பிறப்பும் ஒரு இயக்கம் என்று சொல்லத்தக்க வகையில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டு 2026-ல் கழக ஆட்சி மீண்டும் மலர தேர்தல் பரப்புரையை இன்றே தொடங்க உறுதி ஏற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

சூரியக் கொள்கையின் சுடராகதிராவிட தத்துவத்தின் தொடராக செயலாற்றும் கழக இளைஞரணி செயலாளரும் தமிழ்நாட்டின் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை “மனிதநேய உதய நாளாக” சென்னை கிழக்கு மாவட்டம் 2019-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து கொண்டாடி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டும் அவரின் பிறந்த நாளை பல்வேறு விழாக்களும் கருத்தியல் அரங்கங்களும் நலத்திட்ட உதவிகளும் நடத்தி சீரும் சிறப்புமாக கொண்டாடுவதென முடிவெடுத்து இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

#### இரங்கல் தீர்மானம்

கழக வளர்ச்சியில் முழுமூச்சுடன் ஈடுபட்டும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் ‘கழகத் தலைவர் தளபதி, இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் மீதும் மாறா அன்பு கொண்ட சென்னை கிழக்கு மாவட்டத்தை சார்ந்த நிர்வாகிகள்

கழக சொற்பொழிவாளரும் சென்னை கிழக்கு மாவட்ட இலக்கிய அணி துணை தலைவருமான எம். ஆர்.வெங்கடேசன் அவர்கள் மறைவிற்கும்.

வில்லிவாக்கம், மேற்குப் பகுதி வட்டக் கழகச் செயலாளர் ஜெ.தங்கராஜ் மற்றும் முன்னாள் வட்டக் கழகச் செயலாளர் மு. மோகன் அவர்கள் மறைவிற்கும்.

திரு.வி.க. நகர் வடக்குப் பகுதி 71 ‘அ’ வட்ட பகுதி பிரதிநிதி விஷ்வா அவர்கள் மறைவிற்கும்

கொளத்தூர் கிழக்குப் பகுதி 68 ‘அ’ வட்டத்தைச் சார்ந்த பாக முகவர் யுவராஜ் அவர்களின் மறைவிற்கும் இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து அவர்களை இழந்து வாடும் அவர்களது குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றியது.



மதுரவாயல் வடக்கு பகுதி இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச.சங்கர் கணேஷ் எம்.சி.தலைமையில், மதுவாயல் வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் பூ. நவராஜ் முன்னிலையில் 143வது வார்டில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ பகுதி கழகச் செயலாளர், மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் ஆகியோர் பங்கேற்று இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை மற்றும் பாகத்திற்கு ஒரு இளைஞரணி பொறுப்பாளர் நியமித்தல் குறித்து ஆலோசனை வழங்கினர். இந்நிகழ்வில் மதுரவாயல் வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் எம்.கே.பி.அண்ணாதாசன், எம்.எம்.ஜெயரத்தினம், எம்.இ.ஸ்டாலின், ப. ஆலன், எஸ்.ஜி.மாதவன்,பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ஆர்.பிரசாந்த், அன்பு,நரேஷ் உள்ளிட்ட வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர் .



சென்னைதெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதி, துரைப்பாக்கம், 193 வது வட்டம், அரசினர் பள்ளியில் புதிய வாக்காளர்கள் சேர்க்கும் சிறப்பு முகாம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, வட்டக் கழகச் செயலாளர் ஏ.கே.ஆனந்த் தலைமையில் சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் வி.இ.மதியழகன், தொகுதிப் பார்வையாளர், தி.மு.க. தலைமை இலக்கிய அணிப் பொருளாளர் அரிமா டாக்டர் நா.சந்திரபாபு ஆலோசனைகள் வழங்கி வாக்காளர் பட்டியல் முகாமினை ஆய்வு செய்தனர்.